# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# க.பொ.த (உயர்தரம்) 2020
# பயிற்சிப் பரீட்சை
# பகுதி 1 வினாக்களுக்கான
# விடைத்தாள் விளக்கம்
# வணிகக்கல்வி

01. 2018 ஆம் ஆண்டின் மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி இலங்கையின் தேசிய வெளியீடுகள் தொடர்பான சில அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

A. நெற்பயிர்ச்செய்கை சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை மாதிரி அடிப்படையில் வவுனியா, அனுராதபுர மாவட்டத்தில் மகாவலி எச் வலயத்தில் அறிமுகப்படுத்தியது.

**விவசாயத்துறை**

B. நாடு முழுவதும் ஏழு விலங்கு மருத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டதுடன் இரண்டு புதிய விலங்கு மருத்துவப்பணி அலுவலகங்கள் நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

**விவசாயத்துறை**

C. அணியும் ஆடை உற்பத்தி 2017 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட 4.7% கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018 இல் 3.9% வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**கைத்தொழில் துறை**

D. 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சுருக்கமடைந்திருந்த கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உற்பத்தி 2018 இல் விரிவொன்றை பதிவு செய்தது.

**கைத்தொழில் துறை**

E. 2018 இல் இலங்கை புகைவண்டி பயணிகள் போக்குவரத்து மிதமான அதிகரிப்பொன்றினை பதிவு செய்த வேளையில் பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் வீழ்ச்சியை பதிவு செய்தது.

**சேவைத் துறை**

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் கைத்தொழில்துறையின் செயலாற்றத்தை வெளிக்காட்டும் கூற்று/ கூற்றுக்களாக அமைவது,

(1) A யும், B யும்
(2) C யும், D யும்
(3) A, B, C ஆகிய மூன்றும்
(4) E மட்டும்
(5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்

02. பின்வருவனவற்றுள் எது வர்த்தகத்திற்கு சமமானதாக இருக்க முடியும்?

(1) முதனிலை உற்பத்தி

(2) இரண்டாம்நிலை உற்பத்தி

(3) மூன்றாம் நிலை உற்பத்தி

(4) வியாபாரம்

(5) துணைநிலைச் சேவைகள்

( 3 )

# வணிகத்தின் பிரிவுகள்

## கைத்தொழில்

### ஆக்கக் கைத்தொழில

- விவசாயம்
- சுரங்கம் அகழ்தல்
- மீன்பிடித் தொழில்
- வனத்தொழில்

1 ஆம் நிலை

### அகழ்வுக் கைத்தொழில்

- உருமாற்றும் கைத்தொழில்
- பொருத்தும் கைத்தொழில்
- கட்டுமானம்

2 ஆம் நிலை

## வர்த்தகம்

### வியாபாரம்

- உள் நாட்டு வியா பாரம்
- வெளி நாட்டு வியா பாரம்

### துணைநிலைச் சேவைகள்

- வங்கி
- காப்புறுதி
- தொடர்பாடல்
- போக்குவரத்து
- களஞ்சியப் -படுத்தல்

3 ஆம் நிலை

03. வணிகச்சூழல் தொடர்பாக சில கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

A. வணிகமொன்றின் **அகச்சூழலை** கற்பதன் மூலம் பலம், பலவீனங்களை அறிந்து கொள்ளமுடியும்

B. வணிகம் சந்தையில் முன்வைக்கின்ற பொருள் அல்லது சேவைக்கு **மாற்றுப்பொருள் அல்லது சேவையினை** முன் வைக்கின்றவர்கள் போட்டியாளர்கள் ஆவார்.

C. பொருட்கள் **காலம் கடந்தவைகளாவதற்கு** காரணமாக அமையும் சூழல் தொழில்நுட்பச் சூழல் ஆகும்.

மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக சரியான விடையினைத் தெரிவு செய்க.

(1) A, B, C ஆகிய மூன்றும் சரியானவை
(2) A, B, C ஆகிய மூன்றும் தவறானவை
(3) A சரியானது, B, C தவறானவை
(4) A, B சரியானது, C மட்டும் தவறானது
(5) A, C சரியானது, B மட்டும் தவறானது



(..........)

# SWOT பகுப்பாய்வு

| | HELPFUL (for your objective) | HARMFUL (for your objective) |
|---|---|---|
| INTERNAL (within organisation) | **Strengths** பலம்<br>S<br>• ___<br>• ___<br>• ___<br>• ___<br>• ___ | **Weaknesses** பலவீனம்<br>W<br>• ___<br>• ___<br>• ___<br>• ___<br>• ___ |
| EXTERNAL (outside organisation) | **Opportunities** வாய்ப்பு<br>O<br>• ___<br>• ___<br>• ___<br>• ___<br>• ___ | **Threats** அச்சுறுத்தல்<br>T<br>• ___<br>• ___<br>• ___<br>• ___<br>• ___ |

04. வணிகத்தின் **சமூகப்பொறுப்பு** என்ற எண்ணக்கருவானது,

(1) வணிகமானது **சட்டத்தின் பிரகாரம்** தொழிற்பட வேண்டும் என்ற கருத்தாகும்.

(2) வணிகமானது தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினர்களுக்கும் நன்மைபயக்கக் கூடிய விதத்தில் **நல்லவை, கெட்டவை தொடர்பாக விளங்கிக்கொள்ளல்** என்பதாகும்.

(3) வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து **அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும்** இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக்கூடிய முறையில் செயற்படல் என்பதாகும்.

(4) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும்போது **பங்குதாரர்களது குறிக்கோள்களை** கருத்தில்கொள்ளத் தேவையில்லை என்ற கருத்தாகும்.

(5) வணிகமானது தீர்மானங்களை மேற்கொள்ளும்போது **வாடிக்கையாளர்களது தேவைகளையும், விருப்பங்களையும்** கருத்தில் கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும்.

05. பின்வரும் அரச செலவுகளில் அரசின் மீண்டெழும் செலவுகளாக **கருதப்பட முடியாதது** எது?

(1) கல்வி

(2) சுகாதாரம்

(3) சூழல் பாதுகாப்பு

(4) வட்டிக் கொடுப்பனவுகள்

(5) வீதி நிர்மாணம்

(..........) 5

அரச செலவுகள்

விருத்திச் செலவுகள் மூலதனச் செலவுகள்

1. **விருத்திச் செலவுகள்:**

அரச சேவைகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக வருடமொன்றில் மீண்டும் மீண்டும் இடம்பெறக்கூடிய செலவுகளைக் குறிக்கும். இவற்றை மீளெழும் செலவுகள் எனவும் அழைக்கப்படும்.

**உதாரணம்:** சம்பளமும் கூலியும், வட்டிக் கொடுப்பனவுகள்

2. **மூலதனச் செலவுகள்**

அரசினால் நீண்டகால முதலீடுகளுக்காக மேற்கொள்ளும் செலவுகளே மூலதனச் செலவுகளாகும்.

**உதாரணம்:** வீதி நிர்மாணம், பாலங்கள் நிர்மாணம்

06. நுகர்வோர் உரிமைகள், மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. தகவல்கனைப் பெறுதல்
B. சமூகம் தொடர்பான கவனம்
C. தொடர்ச்சியான பங்களிப்பு
D. தெரிவு
E. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல்
F. ஒத்துழைப்பு
G. நுகர்வோர் கல்வியைப் பெறுதல்
H. சூழல் தொடர்பான கவனம்

மேலே உள்ளவற்றில் **நுகர்வோர் பொறுப்புக்களை** மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1)A, D, E, G (2) B, C, F, H
(3) B, C, D, E (4) D, E, F, G
(5) E. F. G. H

# நுகர்வோர் உரிமைகள்

1. பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
2. தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமை
3. தெரிவு செய்வதற்கான உரிமை
4. செவிமடுப்பதற்கான உரிமை
5. அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமை
6. இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
7. நுகர்வோர் கல்வி பெறுவதற்கான உரிமை
8. தேகாரோக்கியம் கொண்ட சூழலில் வாழ்வதற்கான உரிமை




சூழல் தொடர்பான கவனம்
தொடர்ச்சியான பங்களிப்பு
ஒத்துழைப்பு
அறிவை பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை
சமூகம் தொடர்பான கவனம்
நுகர்வோர் பொறுப்புக்கள்
CONSUMER IS KING

07. வாழையிலைகளை பதப்படுத்தி உணவு பொதியிடலுக்கான பெட்டிகளை தயாரித்து ஏற்றுமதி செய்யும் ‘ பசுமை உற்பத்திகள்’ வணிகத்தின் உரிமையாளர்களான ஆதித்தன், நிருத்திகா ஆகியோருக்கு 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த முயற்சியாளருக்கான விருது கிடைக்கப் பெற்றது.

பசுமை உற்பத்திகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) பசுமை உற்பத்திகள் வணிகத்திற்கு **சட்ட ஆளுமை** உண்டு. ×

(2) பசுமை உற்பத்தி வணிகத்தின் ஆதித்தன், நிருத்திகா ஆகியோரின் **நட்டப்பொறுப்பு** வரையறுக்கப்படாததாகும். √

(3) பசுமை உற்பத்தி வணிகம் தனது மூலதனத்தேவையை நிறைவு செய்ய பகிரங்கமாக பொது மக்களுக்கு **பங்குகளை விற்பனை** செய்ய முடியும். ×

(4) பசுமை உற்பத்திகள் வணிகம் **நீண்டகாலம் வாழ்தன்மை** கொண்டது. ×

(5) பசுமை உற்பத்திகள் வணிகம் ஒரு **சுயாதீனமான** வணிகமாகக் காணப்படும். ×

(...2...)

08. வணிக அமைப்புக்களின் பெயர்கள் சில X நிரலிலும், அவ்வமைப்புக்களின் பண்புகள் Y நிரலிலும் தரப்படுகின்றது.

| X | Y |
|---|---|
| 1. வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பக முறை (தனிக்) கம்பனி | A. அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு வாக்குரிமை உண்டு. |
| 2. வரையறுக்கப்பட்ட மீன்பிடி கூட்டுறவுச் சங்கம் | B. விசேட அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்றது. |
| 3. இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் | C. சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து காணப்படாமை. |
| 4. புகையிரதத் திணைக்களம் | D. ஆகக் குறைந்த இயக்குனர் எண்ணிக்கை ஒருவராக இருத்தல் |

(1) D, A, B, C (2) D, A, C, B (3) B.C A, D
(4) A, D, B, C (5) C. D. A, B

1

09. சிற்றளவு வணிகங்களில் **காணமுடியாத** பண்பாக அமைவது,

(1) ஊழியர்களை பணிக்கமர்த்தலும், பயிற்சி வழங்கலும் இலகுவாக இருத்தல்

(2) சிறியளவிலான மூலதனத்தினைக் கொண்டேனும் வணிகத்தினை ஆரம்பிக்கக் கூடியதாகவிருத்தல்

(3) வணிகக் கருமங்களுக்கு குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பை பெறக் கூடியதாகவிருத்தல்

(4) நவீன தொழில்நுட்பங்களை எளிதாக பயன்படுத்தக் கூடியதாகவிருத்தல்

(5) மாற்றங்களுக்கு விரைவாக முகம் கொடுக்க முடியுமாகவிருத்தல் (4)

10. தற்காலத்தில் **பெண்கள் முயற்சியாண்மையில்** ஈடுபடுதல் அவசியமாவது,

(1) கடன் பெற்றுக்கொள்ளல் இலகுவானது என்பதனாலாகும்.

(2) வெற்றிகரமான முயற்சியாளரென விருதுகளை பெறுதல் இலகுவானது என்பதனாலாகும்.

(3) அரசினால் நிதிசாரா ஊக்குவிப்புக்கள் அதிகமாக வழங்கப்படுவதனாலாகும்.

(4) வணிகங்களின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதனாலாகும்.

(5) பெண்களின் பங்களிப்பு அவசியமான வணிகங்கள் காணப்படுவதனாலாகும். (.. 5 ..)

# பெண்களுக்கான தனித்துவமான தொழில்கள்



11. நிதி நிறுவனங்களின் தொகுதி சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களை** மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) முதல்நிலை வணிகர்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், பங்குத்தரகுக் கம்பனிகள்

(2) கூட்டுறவு கிராமிய வங்கி, உத்தரவுப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள்

(3) காப்புறுதிக் கம்பனிகள், ஊழியர் நம்பிக்கை நிதியம், அரச சேவைகள் நம்பிக்கை நிதியம்

(4) விசேட குத்தகை நிதிக் கம்பனிகள், முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள், முதல் நிலை வணிகர்கள்

(5) ஊழியர் நம்பிக்கை நிதியம், இலங்கை மத்திய வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி

( 3 ..)

# இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்கள்

- **வங்கித்துறை**
  1. இலங்கை மத்திய வங்கி
  2. உத்தரவு பெற்ற வணிக வங்கி
  3. உத்தரவு பெற்ற விசேட வங்கி
- **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்**
  1. உத்தரவு பெற்ற நிதிக் கம்பனி
  2. கூட்டுறவுக் கிராமிய வங்கி
  3. சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (சனச)
  4. விசேட நிதி நிறுவனங்கள்
  5. விசேட குத்தகை நிதிக் கம்பனிகள்
  6. முதல் நிலை வழங்குனர்கள்
  7. பங்குத் தரகர்கள்
  8. அலகுப் பொறுப்பு / அலகுப் பொறுப்பு முகாமைத்துவக் கம்பனிகள்
  9. சந்தைத் தரகர்கள்
  10. முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள்
- **ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்**
  1. காப்புறுதிக் கம்பனிகள்
  2. ஊழியர் நம்பிக்கை நிதியம்
  3. சேவை வழங்குனர்களின் பொறுப்பு நிதியம்
  4. அங்கீகாரமளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் நம்பிக்கை நிதியம்
  5. அரச சேவைகள் நம்பிக்கை நிதியம்

12. காசோலை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.

(1) காவியின் காசோலையைவிட கட்டளைக் காசோலைகளின் பாதுகாப்பானது அதிகமாக இருப்பதுடன் இக் (கட்டளைக்) காசோலையினை சாட்டுதல் செய்யும்போது **புறக்குறிப்பிடல்** அவசியமன்று.

(2) காசோலையில் அச்சிடப்பட்டுள்ள 'அல்லது கொண்டு வருபவருக்கு' என்ற சொல் வெட்டப்படாது விடப்பட்டுள்ள காசோலை காவியின் காசோலை ஆகும்.


(3) காசோலையுடன் தொடர்புடைய எந்தவொரு பிரிவினரும் கோடிடலை மேற்கொள்ள முடிவதுடன், இடப்பட்ட கோட்டை பிறப்பித்தவரால் மாத்திரமே இரத்துச் செய்ய முடியும்.

(4) காசோலையொன்றின் கோடுகளுக்கிடையே 'பெறுவோன் கணக்கு மட்டும்' என்ற சொல் எழுதப்பட்டிருப்பது சாட்டுதலை வரையறுக்கும் கோடிடல் முறையாகும்.


(5) காசோலையொன்று சட்டரீதியாக சாட்டப்பட்டது என்பது புறக்குறிப்பிடல் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

(……1……)


## கட்டளைக் காசோலை ORDER CHEQUE


ABC Bank
Rawang, Selangor
012389
STAMP DUTY PAID
DATE 0 1 0 1 1 7
D D M M Y Y
PAY LEE AH MIN
~~OR BEARER~~
RINGGIT MALAYSIA FIVE HUNDRED ONLY
RM 500.00 ***
CHONG SEE KIM
CSeeKim
NO SIGNATURE BELOW THIS LINE
!:01 " 0123456 " 01 " 012345 " 12345678 01


## காவியின் காசோலை BEARER CHEQUE


ABC Bank
Rawang, Selangor
012389
STAMP DUTY PAID
DATE 0 1 0 1 1 7
D D M M Y Y
PAY LEE AH MIN
OR BEARER
RINGGIT MALAYSIA FIVE HUNDRED ONLY
RM 500.00 ***
CHONG SEE KIM
CSeeKim
NO SIGNATURE BELOW THIS LINE
!:01 " 0123456 " 01 " 012345 " 12345678 01


## விசேடமுறை குறுக்குக் கோடிடல்




## பொதுமுறை குறுக்குக் கோடிடல்




## புறக் குறிப்பிடல்



13. நிரோசன் என்பவர் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான இரும்புப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். அவர் வணிகம் தொடர்பாக எதிர்நோக்கும் இடர்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. கட்டடம் தீப்பற்றுவதன் மூலம் ஏற்படும் இடர்

B. வணிகமானது கடந்த வருடங்களில் நட்டமடைந்து செல்லுதல்

C. இரும்பு துருப்பிடித்தலால் ஏற்படும் இடர்

D. கடன்பட்டோனிடமிருந்து பெறவேண்டிய பணம் கிடைக்கப் பெறாமைக்கான இடர்

E. வணிகத்தில் இடம்பெறக் கூடிய கள்வர் அபாய இடர்

F. வழிப்பணக் கொள்ளை மூலம் இடம் பெறும் இடர்

G. பிழையான முகாமைத் தீரமானங்களால் ஏற்படக் கூடிய இடர்

மேற்கூறியவற்றுள் காப்புறுதி செய்யக் கூடிய இடர் எத்தனை காணப்படுகின்றது.

(1) இரண்டு (2) நான்கு (3) ஐந்து

(4) ஆறு (5) மூன்று (.........) 2

## காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள்

- ❖ கட்டடம் தீப்பற்றுதலின் மூலம் இடம்பெறும் இடர்
- ❖ வாகன விபத்து இடர்
- ❖ வழிப்பறிப் பணக் கொள்ளை மூலம் இடம்பெறும் இடர்
- ❖ கடன்படுனரிடமிருந்து பெறவேண்டிய பணம் கிடைக்கப் பெறாமைக்கான இடர்

## காப்புறுதி செய்ய முடியாத இடர்கள்

- ❖ வணிகமானது நட்டமடைதல்
- ❖ இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் இடர் (தேய்வுறுதல், பழமையடைதல், ஆவியாதல்)
- ❖ தனது திறன், பலம் என்பவற்றினடிப்படையில் தீரம்ானிக்கப்படும் இடர் (பரீட்சை யில் சித்தியடையாமை, காதல் தோல்வி)
- ❖ வடிவமைப்புக்கள் மாற்றமடைவதால் ஏற்படும் இடர்

14. பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களின் அனுகூலங்கள் சில கீழே தரப்படுகின்றது.

A. பிரச்சினையொன்றை மிக விரிவாக முன்வைத்து கலந்துரையாடி தீர்மானமெடுக்க முடிதல் — வாய்மொழி மூலம்

B. தரவுகள், குறிப்புக்கள், அட்டவணைகள் என்பவற்றை இலகுவாக தொடர்பாடல் செய்ய முடிதல் — எழுத்து மூலம்

C. தகவல்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் முன்வைக்க முடிதல் — சமிக்ஞை மூலம்

D. தகவல்களை வழங்குபவரும், பெறுபவரும் நேரடியாக தொடர்புபடல் — வாய்மொழி

E. தகவல்களை மிக விரைவாகவும், இரகசியமாகவும் முன்வைக்க முடிதல் — வாய்மொழி

F. தகவல்களின் சரியான தன்மை உயர்மட்டத்தில் காணப்படல் — சமிக்ஞை மூலம்

G. கூடிய விளக்கத்துடன் முன்வைக்க முடிதல் — எழுத்து மூலம்

மேற்கூறப்பட்ட அனுகூலங்களில் **வாய்மொழி மூலமான தொடர்பாடலின்** அனுகூலங்களை மட்டும் இனங்காட்டும் எழுத்துக்களாக அமைவது,

(1) B, C, D (2) C, D, E (3) A, E, F (4) A, D, E (5) C, F, G

4

15. பொருட்களின் தொகையொன்றை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலிருந்து அல்லது உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்திலிருந்து அவற்றை சந்தைப்படுத்தும் வரையில் அல்லது விநியோகிக்கும் வரையில் பாதுகாப்பாக வைத்திருக்கும் அல்லது நீண்டகாலம் வைத்திருக்கும் செயல்முறையைக் குறிப்பது,


(1) களஞ்சியப்படுத்தல்
(2) அமையவியல் சேவை (logistic)
(3) போக்குவரத்து
(4) விநியோகச் சங்கிலி
(5) இருப்புக் கட்டுப்பாடு (……1……)

# களஞ்சியப்படுத்தல்






“having the right item in the right quantity at the right time at the right place for the right price in the right condition to the right customer.”


விநியோகச் சங்கிலி
Producer
Producer
Producer
Producer
Producer
Agent/Broker
Wholesaler
Distributor
Wholesaler or Distributor
Retailer
Retailer
Retailer
Retailer
Consumer
Consumer
Consumer
Consumer
Consumer

16. **சில்லறை வியாபாரமாகக்** கருதப்படும் கூற்றினைத் தெரிவு செய்க.

(1) பாடசாலை சிற்றுண்டிச்சாலையொன்றிற்கு 100 பால் பக்கற்றுகளை கொள்வனவு செய்தல்

மீள்விற்பனை

(2) கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவர் 50 சீமெந்து பக்கற்றுகளை கொள்வனவு செய்தல்

மீள்விற்பனை

(3) சக்தி விளையாட்டுக்கழகம் வருடாந்த உணவுப் பந்தலினை மேற்கொள்ள 100 கிலோகிராம் அரிசியினை கொள்வனவு செய்தல்

**இறுதி நுகர்வு**

(4) தம்ரோ தளபாட விற்பனை நிலையத்திலிருந்து தளபாட விற்பனை நிலையமொன்று அலுமாரி ஒன்றினை கொள்வனவு செய்தல்

மீள்விற்பனை

(5) வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையொன்று நீரிழிவு நோயாளிக்குப் பொருத்தமான இலைக்கஞ்சியினை இலைக்கஞ்சி தயாரிக்கும் நிமலன் என்பவரிடமிருந்து கொள்வனவு செய்தல்

மீள்விற்பனை

3 ..)

17. இலங்கையின் இறக்குமதி வகுதிக்குள் நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் என்பன உள்ளடங்குகின்றன. கீழே சில வகுதிகள் தரப்படுகின்றன. இவற்றுள் **முதலீட்டுப் பொருட்களை** மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) உணவும் குடிபானமும், உணவல்லா நுகர்வுப்பொருட்கள், எரிபொருள்

(2) பொறிகளும் கருவிகளும், போக்குவரத்து கருவிகள், கட்டடப்பொருட்கள்

(3) எரிபொருள், வளமாக்கி, இரசாயன உற்பத்திகள்

(4) கோதுமை மற்றும் சோளம், பொறிகளும் கருவிகளும், கட்டடப்பொருட்கள்

(5) உணவும் குடிபானமும், எரிபொருள், பொறிகளும் கருவிகளும்

(... 2 ...)

## நுகர்வுப் பொருட்கள்

1. உணவும் குடிபானங்களும் 2. அரிசி
3. சீனி மற்றும் சீனி இனிப்பு வகை 4. பால் உற்பத்திகள்
5. பருப்பு வகை 6. ஏனையவை

❖ உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்

1. வாகனங்கள் 2. மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள்
3. வீட்டுப் பாவனைப் பொருட்கள் 4. புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள்
5. ஏனையவை

## இடைநிலைப் பொருட்கள்

1. எரிபொருள் 2. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள்
3. வைரங்கள், அருமையான கற்கள் மற்றும் உலோகங்கள் 4. இரசாயன உற்பத்திகள்
5. கோதுமை மற்றும் சோளம் 6. வளமாக்கி 7. ஏனைய இடைநிலைப் பொருட்கள்

## முதலீட்டுப் பொருட்கள்

1. கட்டடப் பொருட்கள் 2. போக்குவரத்துக் கருவிகள்
3. பொறியும் கருவியும் 4. முதலீட்டுப் பொருட்கள்
5. ஏனைய முதலீட்டுப் பொருட்கள்

18. திட்டமிடலின்போது எவ்விடயங்களை கருத்தில்கொள்ள வேண்டும் எனும் வினாவிற்கு சில மாணவர்கள் வழங்கிய பதில்கள் வருமாறு:-

A. குறித்த காலவரையொன்றிருத்தல் √

B. சூழல் மாற்றத்திற்கேற்ப மாறும் தன்மை கொண்டிருத்தல் √

C. நடைமுறையில் செயற்படுத்தக் கூடியதாகவிருத்தல் √

D. நிறுவனத்தின் சகல மட்ட ஊழியர்களாலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருத்தல் √

E. வினைத்திறனாக இருத்தல் √

மேலே குறிப்பிட்டவற்றுள் திட்டமிடலின்போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாக அமைவது,

(1) A மட்டும் (2) A யும், B யும் மட்டும்

(3) A, B, C மட்டும் (4)A,B,C,D மட்டும்

(5) மேற்குறிப்பிட்ட அனைத்தும் (…. 5

19. முகாமைத்துவக் கருமங்கள் தொடர்பான வரைவிலக்கணங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. நிறுவனமொன்றின் குறிக்கோள்களை உருவாக்குதல், அவற்றை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் செயல்முறை **திட்டமிடல்**

B. குழு அங்கத்தவர்களின் தொழில்களுடன் தொடர்புடைய கருமங்களில் வழிகாட்டல்களையும், அழுத்தங்களையும் ஏற்படுத்தக் கூடிய செயல்முறை **தலைமைத்துவம்**

C. ஏதாவது அமைப்பொன்றின் ஊழியர்களின் உச்ச பங்களிப்பினை சுயவிருப்பத்துடனும், திருப்தியுடனும் பெற்றுக் கொள்வதற்காக சேவை செய்யத் தூண்டும் செயல்முறை **ஊக்கப்படுத்தல்**

D. நிறுவனமொன்றின் உண்மை விளைவுகளை திட்டமிட்ட விளைவுகளுடன் ஒப்பிடுதல், மாறல்கள் காணப்படுமாயின் அவற்றை இனங்கண்டு திருத்துகின்ற செயல்முறையைக் குறிக்கும். **கட்டுப்படுத்தல்**

மேலே கூறப்பட்ட வரைவிலக்கணங்களால் குறிப்பிடப்படும் முகாமைத்துவக் கருமங்கள் ஒழுங்காக அமையும் விடைத்தொகுதியாக அமைவது,

(1) தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், தொடர்பாடல், ஒழுங்கமைத்தல்
(2) திட்டமிடல், தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், கட்டுப்படுத்தல்
(3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்
(4) திட்டமிடல், தொடர்பாடல், ஊக்கப்படுத்தல், கட்டுப்படுத்தல்
(5) தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், ஒழுங்கமைத்தல், தொடர்பாடல் (.........)

2

20. ஒழுங்கமைத்தல் படிமுறையின்போது ஒவ்வொரு ஊழியரும் இலகுவாக நிறைவேற்றக் கூடியவாறு முழுச் செயற்பாடுகளையும் **சிறிய மற்றும் எளிய பிரிவுகளாக வகைப்படுத்தலைக்** குறிப்பது,

(1) வேலைப்பகிர்வு

(2) திணைக்களப்படுத்தல்

(3) அதிகார கையளிப்பு

(4) இணைப்பாக்கம்

(5) வேலை நியமங்களை உருவாக்குதல்

1

(..........)




வேலைப் பகிர்வு

திணைக்களப்படுத்தல்



அதிகார கையளிப்பு








இணைப்பாக்கம்

# வேலை நியமங்களை உருவாக்கல்

- Production capacity sheet
- Standardized combination table
- Standardized work chart



21. ராகுல், தீபக் என்னும் இரண்டு முயற்சியாளர்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தி தொடர்பான விபரம் வருமாறு:-

ராகுல்:- **குளிர்பான உற்பத்தி**

தீபக்:- **பிறந்தநாள், திருமண வைபவங்களுக்குத் தேவையான கேக் வகைகளை தயாரித்தல்**

மேற்படி உற்பத்திகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தும் உற்பத்தி முறைகளினால் ராகுல் என்னும் முயற்சியாளருக்கு கிடைக்கும் அனுகூலம் ஒன்றினையும், தீபக் என்னும் முயற்சியாளருக்கு ஏற்படும் பிரதிகூலம் ஒன்றினையும் முறையாக வெளிக்காட்டும் விடையாக அமைவது,

(1) வாடிக்கையாளர் தேவை விருப்பத்திற்கேற்ப உற்பத்தி இடம்பெறும், கிரயம் குறைவாகக் காணப்படல்

(2) அலகுக் கிரயம் குறைவு, பாரியளவு முதலீடு தேவையாகவிருத்தல்

(3) நவீன தொழில்நுட்ப வசதிகளை இலகுவாக பயன்படுத்த முடிதல், சந்தையை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி இடம்பெறாதிருத்தல்

(4) ஊழியர் எண்ணிக்கை குறைவாகவிருத்தல், சந்தை இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருத்தல்

(5) நுகர்வோர் திருப்தியை உயர்மட்டத்தில் பேணல், கிரயம் உயர்வாகக் காணப்படல்

( 3 )




ராகுல்




தீபக்

22. EOQ வினை கணிப்பிடும் வரைபடமுறை கீழே தரப்படுகின்றது.





EOQ (பொருளாதாரக் கட்டளைக் கணியம்)

வரைபடத்தின்படி 1, 2, 3 ஆகிய இலக்கங்களால் குறிக்கப்படுவது,

1. 1- மொத்தக் கிரயம் 2- பேணல் கிரயம் 3- கட்டளையிடல் கிரயம்
2. 1- கட்டளையிடல் கிரயம் 2- பேணல்கிரயம் 3- மொத்தக் கிரயம்
3. 1- பேணல்கிரயம் 2- மொத்தக் கிரயம் 3- கட்டளையிடல் கிரயம்
4. 1- பேணல்கிரயம் 2- கட்டளையிடல் கிரயம் 3- மொத்தக் கிரயம்
5. 1- கட்டளையிடல் கிரயம் 2- மொத்தக் கிரயம் 3- பேணல்கிரயம்

1

நிறுவனமொன்றின் இருப்புத் தொடர்பாக மொத்தக் கிரயம் இழிவடையுமாறு தடவையொன்றிற்கு கட்டளையிட வேண்டிய இருப்பு அலகுகளின் அளவானது பொருளாதாரக் கட்டளைக் கணியம் (EOQ) எனப்படும்




பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை அளவிடும்போது கட்டளையிடல் கிரயமும் இருப்புப்பேணல் கிரயமும் ஒன்றிற்கொன்று சமமானதாக இருக்க வேண்டும்.

23. கணினி உதவியுடனான வடிவமைப்பினால் (CAD) ஏற்படும் ஒரு நன்மையல்லாதது எது?

(1) வீண் விரயங்கள் குறைவடைதல் √


(2) பூச்சிய வழுவுடைய உற்பத்திப் பொருட்கள் உருவாக்கப்படல் √

(3) வினைத்திறன் அதிகரித்தல் √

(4) தொழில் வழங்குநர் - தொழிலாளர் தொடர்பு விருத்தியடைதல் ×

(5) உற்பத்தி இயலுமை அதிகரித்தல் √

(…4…)



File
Info
rattleCAD-Project
config
EXIT
Base Concept
Frame Details
ChainStay Details
Summary
Frame Drafting
Mockup
Tube Miter
Frame - Jig
... Components
... info
Format
290.8
471.2
216.8
386.6
Template Road

24. சவர்கார உற்பத்தியினை மேற்கொள்ளும் 'பிறைற் (Bright) உற்பத்தி நிறுவனம்' பின்பற்றும் சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் சில கீழே தரப்படுகின்றன.

A. தரம்
B. கழிவுகள்
C. போக்குவரத்து
D. தனிப்பட்ட விற்பனை
E. பொதியிடல்
F. இடைத்தரகர்
G. உத்தரவாதம்
H. வடிவமைப்பு
I. இருப்பு
K. விளம்பரம்

மேற்குறிப்பிட்டவற்றுள் **உற்பத்திப்பொருள் கலவை மாறிக்குள்** உள்ளடங்கும் விடயங்களை குறிக்கும் எழுத்துக்களாக அமைவது,

(1) B,C,D,F (2) A,E,H,I (3) D,F,G,J
(4) A,B,C,D (5) A, E, G, H

5

(……….)

# Marketing Mix – 7Ps (4+3)

1.jpg




Kotler, Keller, Brady, Goodman & Hansen, *Marketing Management*, 1st Edition © Pearson Ed. Limited 2009

25. பின்வருவனவற்றில் சந்தைப்படுத்துனரின் பார்வையில் **கைத்தொழில் பொருட்களாக** கருதப்படக்கூடிய பொருட்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) சவர்க்காரம், பத்திரிகை, பேனா

(2) ஆயுள் காப்புறுதி ஒப்பந்த வகைகள், புதிய புத்தகம், கலைக்களஞ்சியம்

(3) மின்சார உபகரணங்கள், ஆடைஅணிகள், வீட்டுத்தளபாடங்கள்

(4) சிகரட், அரிசி, பாண்

(5) தொழிற்சாலைக் கட்டடம், தொழிற்சாலை இயந்திரம், முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகள்

(.. 5 ..)


கைத்தொழில் பொருட்கள்
dreamstime.com
ID 136161292 ©


நுகர்வுப் பொருட்கள்

26. சந்தைப்படுத்தல் கலவையில் சகல மாறிகளும் (4Ps) இலக்கு வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாக அமைவது,

(1) தொடர்புமுறை சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
( Relationchip Marketing Concept)


(2) சமூகப்பொறுப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
( Social Relationship Marketing Concept)

(3) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(Intregrated Marketing Concept)

(4) அகச் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(Internal Marketing Concept)

(5) நுண்பாக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(Micro Marketing Concept)

( 3 ..)



Relationship Marketing
- Customers
வாடிக்கையாளர்
- Employees
ஊழியர்
- Partners
உரிமையாளர்
- Financial Community
நிதிவழங்குநர்
Integrated Marketing
- Communication
மேம்படுத்தல்
- Products & service
உற்பத்திப் பொருள்
- Channels
இடம்
- Price
விலை
Holistic Marketing
❖ சமூகம்
❖ சூழல்
❖ ஒழுக்கவிழுமியம்
❖ சட்டம்
Internal Marketing
- Marketing Department
- Senior Management
- Other Departments
Performance Marketing
- Sales revenue
- Brand & customer equity
- Ethics, Environment, Legal, Social

27. பின்வரும் முதலீட்டு தீர்மான வகைகளில் நீண்டகால முதலீட்டு தீர்மானமாக **கருதப்பட முடியாதது,**

(1) **வியாபார இருப்பு** தொடர்பான தீர்மானம்

(2) வணிகத்தை **நவீனமயப்படுத்தல்** தொடர்பான தீர்மானம்

(3) வணிகத்தை **புணரமைத்தல்** தொடர்பான தீர்மானம்

(4) வணிகத்தை **பன்முகப்படுத்தல்** தொடர்பான தீர்மானம்

(5) வணிகத்தை **மேம்படுத்தல்** தொடர்பான தீர்மானம் (... 1 ...)

# நிதி முகாமைத்துவ தீர்மானம்

## முதலீட்டுத் தீர்மானம்

### நீண்டகாலத் தீர்மானம்

1. வணிகத்தை நவீனமயப்படுத்தல் தொடர்பான தீர்மானம் √
2. புனரமைத்தல் தொடர்பான தீர்மானம் √
3. வணிகத்தை மேம்படுத்துதல் தொடர்பான தீர்மானம் √
4. வணிகத்தை பன்முகப்படுத்துதல் தொடர்பான தீர்மானம் √

### குறுங்காலத் தீர்மானம்

1. காசு முகாமைத்துவம் தொடர்பான தீர்மானம்
2. கடன்படுனர் தொடர்பான தீர்மானம்
3. வியாபார இருப்புத் தொடர்பான தீர்மானம்
4. ஏனைய குறுங்கால முதலீடு தொடர்பான தீர்மானம்

## நிதியீட்டல் தீர்மானம

28. X நிரலானது பிரதான நிதி விகிதங்களையும், Y நிரலானது இந்நிதி விகிதங்களுக்குள் உள்ளடங்கும் நிதிவிகிதங்களின் வகைகளையும் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| 1. திரவத்தன்மை விகிதங்கள் (Liquidity Ratio) | A. முதலீட்டின் மீதான திரும்பல் விகிதம் |
| 2. இலாபத்தன்மை விகிதங்கள் (Profitability Ratio) | B. இருப்பு புரள்வு விகிதம் |
| 3. செயற்பாட்டு விகிதம் (Activity Ratio) | C. வட்டி காப்பு விகிதம் |
| 4. இணைவு விகிதம் (Coverage Ratio) | D. விரைவு விகிதம் |

மேற்குறித்த பிரதான நிதிவிகிதங்களுக்கமைய அவற்றின் வகைகளை சரியாகப் பொருந்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A, B, D, C (2) B,C, A, D (3) D, C, B, A (4) D, A, B, C (5) D, A, C, B

4

## திரவத்தன்மை விகிதங்கள்

- ❖ நடைமுறை விகிதம் (Current Ratio)
- ❖ விரைவு விகிதம் (Quick Ratio)

## இலாபத்தன்மை விகிதங்கள்

- ❖ மொத்த இலாப விகிதம் (Gross profit ratio)
- ❖ தேறிய இலாப விகிதம் (Net profit ratio)
- ❖ முதலீட்டின் திரும்பல் விகிதம் (Return on Investment)
- ❖ உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் விகிதம் (Return on Equity)

## செயற்பாட்டு விகிதங்கள்

- ❖ இருப்புப் புரள்வு விகிதம் - Inventory Turnover Ratio
- ❖ கடன்பட்டோர் புரள்வு விகிதம் - Debtors Turnover Ratio
- ❖ மொத்தச் சொத்துப் புரள்வு விகிதம் - Total Assets Turnover Ratio

## இணைப்பு விகிதங்கள்

- ❖ கடன் விகிதம் (Debt Ratio)
- ❖ கடன் உரிமை விகிதம் (Debt - equity Ratio)
- ❖ வட்டிக் காப்பு விகிதம் (Interest Coverage Ratio)

29. நாடொன்றின் நிதிமுறைமையின் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டினையும், வாழ்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு துணையாக அமையும் கொடுப்பனவு, மற்றும் தீர்ப்பனவு முறைகளைக் குறிப்பது,

(1) நிதிச் சந்தை
(2) நிதி நிறுவனங்கள
(3) நிதிக்கருவிகள்
(4) நிதி உட்கட்டமைப்பு வசதிகள்
(5) மத்திய வங்கி (..4..)

**பொருளாதாரமொன்றில் நிதித் தீரமானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதி முறைமை,**

- நிதிச் சந்தை
- நிதி நிறுவனங்கள்
- நிதிக் கருவிகள்
- நிதி உட்கட்டமைப்பு வசதிகள்
- மத்திய வங்கி

**நிதிச் சந்தை**

நிதியங்கள் தேவைப்படுவோர்களையும் நிதியத்தை வழங்குவொர்களையும் தொடர்புபடுத்து வதற்காகக் காணப்படுகின்ற இடமொன்று முறையொன்று அல்லது சந்தர்ப்பமொன்று நிதிச் சந்தை ஆகும்.

**நிதி நிறுவனங்கள்**

நாடொன்றில் நிதிச் சந்தையில் செயற்படுகின்ற வங்கி மற்றும் வங்கியல்லாத சகல நிறுவனங்களும் நிதி நிறுவனங்களாகும்.

**நிதிக் கருவிகள்**

இலங்கையில் நிதிச்சந்தையில் நடைமுறைப்படுதத்ப்படுகின்ற கருவிகள்,

**நிதி உட்கட்டமைப்பு வசதிகள்**

நாடொான்றின் நிதிமுறையின் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டினையும் வாழ் தன்மையையும் உறுதிப்படுத்துவதற்குத் துணையாக அமைகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளை நிதி உட்கட்டமைப்பு வசதிகள் என்றழைக்க முடியும்.

**மத்திய வங்கி**

இலங்கையின் மத்திய வங்கியாக இலங்கை மத்திய வங்கி காணப்படுகின்றது.

30. வெளியக ஊழியர் ஆட்சேர்ப்பின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மையாக அமைவது,

(1) ஊழியர்கள் தூண்டப்படுதல்

(2) சிறந்த ஊழியர் தொடர்பொன்று ஏற்படல்

(3) செலவுகள் குறைவடைதல்

(4) ஆட்சேர்பிற்கு எடுக்கும் காலம் குறைவடைதல்

(5) பதவிக்கு பொருத்தமான நபரை இணைத்துக்கொள்ள முடிதல் (.. 5 ...)

**31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.**

(அ) சிற்றுண்டிச்சாலையொன்றில் தயாரிக்கப்படும் பழக்கலவை பானத்திற்கு பயன்படுத்தப்படும் பழங்களானது உற்பத்திக்கான உள்ளீடுகளில் ....மூலதனம்................... என்பதற்குள் உள்ளடங்குவதோடு, சிற்றுண்டிச்சாலையில் கிடைக்கும் காற்றோட்டமானது ..நிலம்..... என்ற உள்ளீடாகக் கருதப்படும்.

(ஆ) 'ஸ்ரைலோ (Stylo)' என்னும் ஆடை உற்பத்தி வணிகமொன்றிற்கு கிடைக்கும் 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த உற்பத்தியாளருக்கான விருதானது அந்நிறுவனத்தின் பலம் ஆகக் கருதப்படுவதுடன், அரசு துணி இறக்குமதிகளுக்கான வரியினை அதிகரித்தல் குறித்த நிறுவனத்திற்கு ..அச்சுறுத்தல்/சவால்.. ஆகக் காணப்படும்.

32. (அ) அரசின் வருமானங்கள், செலவுகள் தொடர்பாக இடம்பெறும் கருமங்கள் ..... இறைக் கொள்கை ..... ஆகக் கருதப்படுவதுடன், ........ நிதிக் ........ கொள்கையை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்துகின்றது.

(ஆ) அரசானது வணிகங்களுக்கு மின்சார வசதிகளை வழங்குவதன் மூலம் ..... உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவோர் ..... ஆக வணிகத்தில் செல்வாக்குச் செலுத்துவதுடன் புற ரீதியான விலைமட்டங்களில் நிலைப்புத் தன்மையினூடாக .... வெளிநாட்டு செலாவணிவீதம் .... நிலையான மட்டத்தில் பேணுகின்றன.

33. வணிக நிறுவன வகைகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? என்பதை அவற்றிற்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

A. வணிக அமைப்புக்களில் தனியார்துறையை சேர்ந்த இலாப நோக்கற்ற வணிக அமைப்புக்களாக கூட்டுறவு வணிகம் காணப்படுகின்றது. உண்மை

B. Mc, Donald, KFC, Pizza hut போன்ற உற்பத்திகளின் உணவுகளை வழங்கும் வியாபார நிறுவனங்கள் உற்பத்தி அங்கீகார வணிக வகையைச் சார்ந்ததாகும். பொய்

C. பழப்பாகு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நிறுவனமானது அர்ச்சனா கிளாஸ் உற்பத்தியாளர் என்னும் கண்ணாடிப் போத்தல் உற்பத்தி நிறுவனத்துடன் ஒன்றிணைதல் முரண்பாடான இணைவு எனப்படும். பொய்

D. கொழும்பு பங்கு பரிமாற்றகம் ஒரு பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். உண்மை

34. பணவகைகளுக்கான சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன. உதாரணங்கள் இனங்காட்டும் பணவகையினை இடைவெளியில் குறிப்பிடுக.

❖ நிலையான சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள்:-
..................அண்மிய பணம்.....

❖ SET Card, PET Card
..................இலத்திரனியல் பணம்.......

❖ வணிக வங்கிகளில் காணப்படும் நடைமுறை வைப்புக்கள்
..................வங்கிப் பணம்.......

❖ குற்றி நாணயங்களும், தாள் நாணயங்களும்
..................சட்டப் பணம்.......

35. காப்புறுதி தொடர்பாக பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான காப்புறுதி தத்துவங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. டேவிட்டின் ஒரேயொரு சகோதரி நீற்றாவாக இருந்தாலும் அவரின் ஆயுளை டேவிட்டினால் காப்புறுதி செய்ய முடியாது.

.................. காப்புறுதி செய்யத்தகு உரிமை

B. காப்புறுதி ஒப்பந்தத்தினை பெறும்போது ஆயிஷா தனது இருதய நோயினை வெளிப்படுத்தாத காரணத்தினால் இழப்பீட்டினை பெற முடியாதிருந்தது. .................. உச்சநம்பிக்கைத் தத்துவம்

C. வாகீசன் தனது லொறியினை 2 மில்லியனிற்கு காப்புறுதி செய்திருந்த போதும் 1 மில்லியன் இழப்பு ஏற்படும் போது நட்டஈட்டுத் தொகையாக 1 மில்லியன் மட்டுமே கிடைத்தது.

.......... இழப்பீட்டுத் தத்துவம் .......

D. கார்த்திகா தனது வணிகத்திற்கு களவபாயக் காப்புறுதி ஒன்றை பெற்றிருந்தார். கார்த்திகாவின் நிறுவனம் தீயால் ஒரு பகுதி சேதமுற்றது. எனினும் கார்த்திகாவினால் காப்புறுதித் தொகையினை பெறமுடியவில்லை.

அண்மைக் காரணி

..............................................

36. (அ) துணிகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்து ஆடைகளை உற்பத்தி செய்து வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தலானது ................ மீள் ஏற்றுமதி ...... வியாபாரம் என அழைக்கப்படுவதோடு, இலங்கை இந்தியாவிலிருந்து தேயிலையினை இறக்குமதி செய்து ஈரானிற்கு ஏற்றுமதி செய்தல் .................... இறக்கியேற்றல் .. வியாபாரம் என அழைக்கப்படும்.

(ஆ) அரசிற்கு இணையத்தளத்தினூடாக ஊழியர் சேமலாப நிதியினை செலுத்துவது ... B to G ................ இலத்திரனியல் வியாபார முறையாகக் காணப்படுவதோடு, அரசிடமிருந்து வணிகருக்கு **(G2B)** இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைக்கு உதாரணமாக . பொருத்தமான உதாரணம் ....... இனை குறிப்பிட முடியும்.

37. ஒழுங்கமைத்தல் தொடர்பாக கீழே தரப்படும் கூற்றுகளுக்கு பொருத்தமான ஒழுங்கமைத்தல் தத்துவத்தினை இடைவெளியில் குறிப்பிடுக.

A. ஒழுங்கமைப்பின் உயர் முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமை வரை முறிவடையாது செல்கின்ற அதிகாரவழியைக் குறிப்பது,

....கட்டளைச் சங்கிலி.........

B. ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு மட்டுமே பொறுப்புக் கூற வேண்டும் என்ற கோட்பாட்டினைக் குறிப்பது,

....கட்டளையிடலில் ஒருமைப்பாடு

C. ஒரு முகாமையாளருக்கு அறிக்கை இடவேண்டிய ஊழியர் எண்ணிக்கையைக் குறிப்பது,

....கட்டுப்பாட்டு விசாலம்.........

D. நிறுவனத்தின் தீர்மானமெடுக்கும் சகல அதிகாரங்களும் அதன் உயர்முகாமையிடம் காணப்படுவதைக் குறிப்பது,

....மையப்படுத்தல்........

38. கீழே தரப்படும் சமன்பாடுகளில் காணப்படும் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

i. சமப்பாட்டு புள்ளி அலகுகளின் எண்ணிக்கை = மொத்த நிலையான கிரயம்

அலகொன்றிற்கான பங்களிப்பு

ii. மறுகட்டளை மட்டம் = உச்ச இருப்பு பயன்பாடு × உச்ச கட்டளைக் காலம்

iii. இயந்திர உற்பத்தித் திறன் = வெளியீடு

இயந்திர உள்ளீடு

iv. கடன் விகிதம் = நிலையான வட்டி செலுத்தப்படும் கடன்கள்

மொத்த மூலதனம்

39. (அ)கைத்தொழில் பொருள் விநியோக வழிமுறையின் இடைநடுவர்களாக (1) .உற்பத்தியாளரின் முகவர் (2) கைத்தொழில் பொருள் விநியோகஸ்தர் என்போர் காணப்படுகின்றனர்.

(ஆ) சாதாரண பங்குகளை கொள்வனவு செய்யும் முதலீட்டாளர்கள் குறித்தக்கம்பனியின் உரிமையாளராவதுடன், இடர் குறைவானதும், நிர்வாக அதிகாரம் இல்லாததுமான பங்குகளாக முன்னுரிமை ....... காணப்படுகின்றது.

40. அ) சகல தொழில்களும் பணிகள் (Tasks) மற்றும் கடமை பொறுப்புக்கள் என்பவற்றினை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

(ஆ)தொழிலை விபரிப்பதாக ..வேலை விவரணம் காணப்படுவதுடன், தொழிலில் ஈடுபடுவதற்கு பொருத்தமான தனிநபர்களிடம் காணப்பட வேண்டிய தகைமைகளை வெளிக்காட்டுவது தொழில் / வேலை நியமம் ... ஆகும்.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41. பொருட்களோடு ஒப்பிடும்போது சேவைகளில் காணப்படும் விசேட அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) பௌதீக நிலைப்புத் தன்மையற்றது
(2) களஞ்சியப்படுத்த முடியாதது
(3) வழங்குநர்க்கு ஏற்ப வேறுபடும்
(4) வழங்குநரிடமிருந்து பிரிக்க முடியாதது ( ½ ×4= 2புள்ளிகள்)

42. மரத்தளபாட உற்பத்தி வணிகமொன்று அதன் ஊழியர்கள் சார்பாக மேற்கொள்ள வேண்டிய சமூகப்பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) சமத்துவமான நிலை
(2) சிறந்த ஊழியர் தொடர்பு
(3) தொழில் பாதுகாப்பு
(4) சுகாதார வசதிகள்

( ½ ×4= 2புள்ளிகள்)

43. வணிக அமைப்புக்கள் பின்வரும் சந்தர்ப்பங்களின்போது பின்பற்றவேண்டிய சட்டங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. தனியுரிமை வணிகத்தின் பெயர் உரிமையாளரின் பெயரை ஒத்திராத சந்தர்ப்பத்தில்

…1918 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வியாபார பெயர்பதிவுக் கட்டளைச் சட்டம்…

B. பங்குடைமை ஒன்றில் எழுத்து மூலமான ஒப்பந்தம் காணப்படாத சந்தர்ப்பத்தில்

…1890 ஆம் ஆண்டின் பங்குடைமை கட்டளைச் சட்டம்…

C. இலங்கையில் கம்பனி ஒன்றினை கூட்டிணைக்கும் சந்தர்ப்பத்தில்

…2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்…

D. கூட்டுறவு வணிகமொன்றை பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில்

…1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம…

44. முயற்சியாளரிடம் காணப்பட வேண்டிய திறன்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன. கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைத் திறன்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. உள்ளக, வெளியக பிரிவினர்களுடன் சிறந்த இடைத்தொடர்புகளைப் பேணல்

....... ஆளிடைத் தொடர்புத் திறன் ........

B. நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ள சிறந்த தொடர்பொன்றினைப் பேணல்

....... தொடர்பாடல் திறன் .........

C. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல் போன்ற திறன்களைக் கொண்டிருத்தல்

....... அடிப்படை முகாமைத்துவத் திறன் .......

D. தனக்கு கீழ் பணிபுரிவோர்களைக் கொண்டு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஊழியர்களை நெறிப்படுத்தல், ஊக்கப்படுத்தல் மேற்கொள்வதற்கு

....... தலைமைத்துவத்திறன் .........

45. உத்தரவுப்பத்திரம் பெற்ற விசேட வங்கியானது வணிகங்களின் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் முறைகள் நான்கு தருக.

(1) கால, சேமிப்பு வைப்புக்களைப் பொறுப்பேற்றல்.

(2) பல்வேறு துறைகளின் முயற்சியாளர்களுக்குக் கடன் வழங்குதல்.

(3) கம்பனிகளின் பங்குவழங்கலின்போது உறுதிப்பொறுப்பளித்தல் கருமங்களில் ஈடுபடல்.

(4) குத்தகை வசதிகளை வழங்கல்.

(5) முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.

46. புகையிரதப் போக்குவரத்தினை மேம்படுத்த அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நான்கு தருக.

1. புதிய மற்றும் புணரமைப்புச்செய்யப்பட்ட புகைவண்டிப் பெட்டிகள் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டமை
2. வடபகுதி புகைவண்டிச் சேவை விஸ்த்தரிப்பு
3. புகைவண்டிப்பாதை புணரமைப்பு
4. கொழும்பு நகர்ப்புற புகைவண்டி அபிவிருத்திச் செயற்றிட்டம்
5. சமாந்திரமான புகைவண்டிப்பாதை நிர்மாணிப்பு
6. இணைந்த புகைவண்டி நிலையங்களின் புத்தாக்கம்
7. நேரம் தவறாமை, நம்பகத்தன்மையினை அதிகரிப்பதற்கான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டமை
8. புதிய புகைவண்டிப் பெட்டிகள் இறக்குமதிகள்
9. 200 புதிய பாதுகாப்பிடப்பட்ட புகைவண்டிக் கடவை முறைகள் நிறுவுவதற்கான செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றமை

47. முகாமையாளர் ஒருவரின் உபவகிபாகங்களுக்கேற்ப அவரின் கருமங்கள் கீழே தரப்படுகின்றன. அக்கருமங்களுக்குப் பொருத்தமான முகாமையாளர் உபவகிபாகங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

| கருமங்களுக்கான உதாரணங்கள் | முகாமையாளரின் உபவகிபாகங்கள் |
|---|---|
| A. வணிகத்தின் அதிதிகளை வரவேற்றல், சட்டரீதியான ஆவணங்களில் கையொப்பமிடல் | மேலதிகாரி (Figurehead) |
| B. புதிய வேலைத்திட்டங்களில் அபிவிருத்திக்கான உபாய வழிகளை ஏற்பாடு செய்தல் | முயற்சியாளர் ( Entrepreneur) |
| C. தொழிங்சங்கங்களுடன் பேரம் பேசுவதில் பிரதிநிதியாக கலந்து கொள்ளல் | நடுநிலையாளர் (Negotiator) |
| D. வேலைநிறுத்தம், ஒப்பந்தங்களை மீறல், நுகர்வோரின் முறைப்பாடு, பொருள் தட்டுப்பாடு போன்ற நிலைமைகளுக்கு முகம் கொடுத்தல் | தடைகளை கையாள்பவர் (Disturbance handler) |

48. துணிகளிலான கைப்பைகளை **(Hand bags)** உற்பத்தி செய்யும் வணிகமொன்று தனது பொருள் உற்பத்தித்திறனை மேம்படுத்தக் கூடிய முறைகள் நான்கு தருக.

(1) உயர்தரத்துடன் கூடிய மூலப்பொருள்களைப் பயன்படுத்துதல்.

(2) விரயங்கள், சேதமடைதலைக் குறைத்துக்கொள்ளல்.

(3) சிறந்த முறையில் பொருள் இருப்பினைப் பேணல்.

(4) பொருள்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலும் மீள்சுழற்சிக்குட்படுத்தலும்

49. மேம்படுத்தல் முறைகள் சில கீழே தரப்படுகின்றன. அவற்றிற்குப் பொருத்தமான மேம்படுத்தல் முறையினை இடைவெளியில் குறிப்பிடுக.

**A.** பால்பண்ணையாளர் ஒருவர் மோட்டார் சைக்கிளினைப் பயன்படுத்தி பாலினை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்தல் .................. தனியாள் விற்பனை

**B.** டெங்கு ஒழிப்பு தொடர்பில் மக்களுக்கு அறியச் செய்வதற்காக வீதி நாடகமொன்றை நடாத்துதல் . நிகழ்வு மற்றும் அனுபவம

**C.** தனியார் வங்கியொன்றின் அனுசரணையில் க.பொ.த (உயர்தர) வர்த்தகப்பிரிவ மாணவர்களுக்கு செயலமர்வு ஒன்றை நடாத்துதல் . மக்கள் தொடர்பு

**D.** தளபாடங்களுக்கு 50 % வரையிலான கழிவு டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் மட்டும் .. விற்பனை மேம்படுத்தல்

50. பணச்சந்தைக்குள் உள்ளடங்கும் உப/ துணைச் சந்தைகள் நான்கின் பெயர்களைத் தருக.

(1) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை
(2) உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை
(3) திறைசேரி உண்டியல் சந்தை
(4) வணிகப்பத்திரச் சந்தை